பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

**(11.09.2024 முதல் 15.09.2024 வரை)**

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 073 (09) PJN/GKMS/2024 தேதி: 10.09.2024

### காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (05.09.2024 முதல் 09.09.2024 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -15.09.2024 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **05/09** | **06/09** | **07/09** | **08/09** | **09/09** | | **நாள்-1 11/09** | **நாள்-2 12/09** | **நாள்-3 13/09** | **நாள்-4 14/09** | **நாள்-5 15/09** |
| 0 | 0 | 0 | 9.0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 3 | 2 | 0 |
| 38 | 38 | 38 | 38 | 38 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 37 | 37 | 36 | 35 | 35 |
| 26 | 27 | 27 | 26 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 27 | 28 | 27 | 27 |
| 4 | 5 | 4 | 4 | 3 | மேக மூட்டம் | 5 | 5 | 7 | 7 | 8 |
| 48-79 | 55-83 | 47-79 | 55-76 | 53-84 | ஈரப்பதம் (%) | 40-60 | 40-60 | 40-70 | 40-60 | 40-70 |
| 4 | 4 | 4 | 4 | 4 | | 24 | 22 | 20 | 20 | 18 |
| மேற்கு வட மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (11.09.2024 முதல் 15.09.2024 வரை):**

செப்டம்பர் 13 மற்றும் 14 தேதிகளில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 27-37 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 40-70 சதவிகிதமாகவும், காற்றின்வேகம் 18-24 கி.மீஅளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரை

| **பயிர்கள் / கால் நடைகள்** | **பருவம்/ விவரங்கள்** | **வேளாண் ஆலோசனைகள்** |
|---|---|---|
| நெல் | நெல் இரகங்கள் | பின்சம்பா/தாளடி பருவத்திற்கு ஏற்ற மத்திய கால நெல் இரகங்களான எடிடீ 38 (ADT 38), எடிடீ 39 (ADT 39) எடிடீ 46 (ADT 46), கோ 50 (Co 50), கோ 52 (Co 52), டீகேஎம் 13 (TKM 13), டீஆர்ஒய் 3 (TRY 3) மற்றும் கேகேஎல்ஆர் 2 (KKLR 2) விதைகளை பயன்படுத்தலாம். |
| | நிலம் தயாரித்தல் | சேற்று வயல் நேரடி விதைப்பில் 50 கிலோ மணிச்சத்தை அடியுரமாகஇட வேண்டும். பின்பு நிலத்தை சமன் படுத்தி, அரை அடி அகலத்தில்சிறிய வடிகால் வாய்க்கால்கள் நிலத்தின் குறுக்கேயும், 3 மீ இடைவெளியிலும், வரப்பின் ஓரத்திலும் அமைப்பதனாலும் கன மழை |

| | | |
|---|---|---|
| | | ஏற்படும் போது அதிக நீரை வடிகட்டி ஆரம்ப வளர்ச்சி நிலையில் உள்ள நெற் பயிரை பாதுகாக்கலாம். |
| | உலர் விதை நேர்த்தி | ஒரு கிலோ விதைக்கு கேப்டான் அல்லது திரம் பூசணக் கொல்லியுடன் 4 கிராம் என்ற அளவில் விதைப்பதற்கு 24 மணி நேரம் முன்னதாகவே கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். இம்முறையானது நாற்றுகளுக்கு 40 நாட்கள் வரை **குலைநோய்** மற்றும் **செம்புள்ளி** நோய் போன்றவை தாக்காமல் பாதுகாக்கிறது. |
| | விதைப்பு | செப்டம்பர் 30 வரை நேரடி நெல் விதைப்பை_ மேற்கொள்ளலாம். |
| | களை மேலாண்மை | **நாற்றங்காலில்** களையைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு பூட்டாக்ளோர் (Butachlor 50 EC) என்ற களைக்கொல்லியை 1.0 கிலோ (a.i.) என்ற அளவில் விதை விதைத்த எட்டாம் நாள் தெளிக்க வேண்டும். |
| | | **நேரடி சேற்று விதைப்பு** நெல்லில், களை மேலாண்மைக்கு ஹெக்டருக்கு பிரிடிலாக்குளோர் + சேப்னர் (Pretilachlor + safener 30 EC) என்ற களைக்கொல்லியை 0.45 கிலோ (a.i.) என்ற அளவில் விதை விதைத்த மூன்றாம் நாள் தெளிக்க வேண்டும். |
| | | **நேரடி புழுதி விதைப்பு** நெல்லில், களை மேலாண்மைக்கு ஹெக்டருக்கு பென்டிமெத்தாலின் (pendimethalin 30 EC) 1.0 கிலோ (a.i.) என்ற அளவில் விதை விதைத்த ஐந்தாம் நாள் தெளிக்க வேண்டும். |
| கால்நடை | தடுப்பூசி செலுத்துதல் | கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்களுக்கு மழைக்காலம் தொடங்கும் முன்னர் தடுப்பூசிகளைப் போட வேண்டும். |
| | குடற்புழு நீக்கம் | குளம், குட்டைகளில் தண்ணீர் குடிக்கும் மாடுகளுக்கும் அவற்றைச் சுற்றி மேயும் மாடுகளுக்கும் தட்டைப் புழுவிற்கான குடற்புழு நீக்க மருந்தினைப் கொடுக்க வேண்டும். |
| | கொட்டகை நிர்வாகம் | மழைக்காலம் வருவதற்கு முன்பு கால்நடைகள்/ஆடு/கோழி கொட்டகையின் கூரைகளை சரி செய்யவும். இல்லையெனில், அழுக்கு கொட்டகைகளில் மழை நீர் கசிவதால் அமோனியா உற்பத்தியும் மற்றும் இரத்தக் கழிச்சல் நோயும் ஏற்பட வாய்ப்புள்ளது. |
| | | ஆடுகளில் குளம்பு சிதைவு நோயைத் தடுக்க தரையின் விரிசல்கள் மற்றும் மேடு பள்ளங்களை சரி செய்து மழை நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். |
| | ஊட்டமேற்றிய வைக்கோல் | இந்த மாதத்தில் வறண்ட நாட்களில் கால்நடைகளுக்கு வைக்கோலை யூரியா சத்தூட்டப்பட்டதாக மாற்றி வைத்து மழைக்காலம் தொடங்கி குளிர்காலம் முடியும் வரை தீவனமாக பயன்படுத்தலாம். (இதற்கு 100 கிலோ வைக்கோலை பாலித்தீன் சாக்குகளில் மேல் பரப்பி பின் 4 கிலோ யூரியாவை 65 லிட்டர் தண்ணீரில் கலந்து வைக்கோலின் மீது தெளிக்க வேண்டும். பின் காற்று புகாமல் அடைத்து 21 நாட்கள் கழித்து |

| | | |
|---|---|---|
| | | எடுத்து தீவனமாக பயன்படுத்தலாம்.) |

**குறுஞ்செய்தி:** அடுத்த சில நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, பயிர்களுக்கு நீர் பாசனம் செய்வதை தவிர்க்கவும்.

**முதல்வர்**